மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): செவிலியர் பயிற்சி பெறும் மாணவிகளுக்கு திங்கள் ஒன்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகை முதல் வருடம் ரூ. 115-ல் இருந்து 200 ஆகவும், இரண்டாவது வருடம் ரூ. 120-ல் இருந்து 220-ஆகவும், மூன்றாவது வருடம் ரூ. 125-லிருந்து 240-ஆகவும், நான்காவது வருடம் ரூ. 130 லிருந்து 260--ஆகவும் 5-12-1986-ல் உயர்த்தப்பட்டுள்ளது.

திருத்துறைப்பூண்டி பெண்கள் அரசு மருத்துவமனை.

42—(* வினா எண் 11638) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி பெண்கள் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்தி, ரத்த சேமிப்பு கிடங்கு மற்றும் அறுவை சிகிச்சை வசதி செய்துதர கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையை விரிவாக்கம் செய்ய வேண்டிய கோரிக்கைகள் வந்துள்ளன. ஆனால் திட்டமதிப்பீடு குறைக்கப் பட்ட காரணத்தால் 1987-88 ஆம் ஆண்டு பகுதி திட்டத்தில் இம்மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டும் பணியும் மற்ற பணிகளும் சேர்க்க இயலவில்லை. எனினும் இனிவரும் ஆண்டுகளில் இத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியைக் கருத்தில் கொண்டு இம்மருத்துவமனையின் விரிவாக்கம் குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, திருத்துறைப் பூண்டி மருத்துவமனை இருக்கின்ற பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். 20 படுக்கைகள் கொண்ட பகுதியை இந்த ஆண்டில் கட்டப்போவதாகவும் மேலும் 60 படுக்கைகள் கொண்ட

1987 நவம்பர் 11]

பகுதியை கட்டிக் கொடுக்க அரசு அனுமதி வழங்கியிருப்பதாக வும் சமீபத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த இடத்தை வந்து பார்வையிட்டபோது தெரிவித்துச் சென்றார்கள். அந்த திருத்துறைப்பூண்டியில் பெண்கள் மருத்துவ மனையும் ஆண்கள் மருத்துவ மனையும் அரை கிலோ மீட்டர் தூரத்தில் ரோட்டிற்கு அப்பால் இருக்கின்றன. அதனால் நோயாளிகளும் மருத்துவர் களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை எல்லாம் கருத்திற் கொண்டு இந்தப் பெண்கள் மருத்துவமனையை இந்த ஆண்டி லேயே அதிகமான படுக்கை வசதிகள் கொண்டதாக அபிவிருத்தி செய்துதர அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் யாரோ பார்த்து விட்டுத் தெரிவித்ததாகக் கூறுகிறார்கள். அப்படி அரசுக்குத் தகவல்கள் இல்லை. எப்படியும் இந்த ஆண்டு இல்லை. அடுத்த நிதி ஆண்டில் நிதி ஆதாரத்தைப் பெற்றதற்குப் பிறகு அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பெண்கள் குடும்பக் கட்டுப்பாட்டுச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்றாலும் சரி, அல்லது ஆப்பரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்றாலும் சரி ஆண்கள் மருத்துவமனைக்குச் சென்றுதான் செய்ய வேண்டிய நெருக்கடி யான சூழ்நிலை இருக்கிறது. அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு எதிர் காலத்தில் பெண்கள் மருத்துவ மனையிலேயே அறுவை சிகிச்சை செய்வதற்கான ஒரு தியேட்டரும், ரத்த சேமிப்பு கிடங்கும் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு கின்ற அந்த சிக்கலை அரசு உணர்ந்து இருக்கிறது. அதைப் பற்றி அடுத்த ஆண்டு பரிசீலிக்கலாம்.